மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இடம் கிடைத்ததற்குப் பிறகு கட்டிடம் கட்டப்படும். மதுரை மீனாட்சி மாணவியர் அரசினர் கலைக் கல்லூரியின் வளாகத்திற்குள் மகளிருக்குத் தங்கும் விடுதி கட்டுவதிலே தவறு இல்லை. அங்கே கட்டுவதால் அவர்களுக்கும் ஒரு பாதுகாப்பு இருக்கும். அங்கிருக்கும் பெண்களுக்கும் துணையாக இருக்கும். கல்விச் சூழ்நிலையும் நன்றாகத்தான் இருக்கும்.

3. 1981-82 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை மீது பொது விவாதம்— தொடர்ச்சி.

*திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு தலைவர் அவர்களே. 1981-82 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையைக் கொடுத்திருக்கிற ஆட்சி, எந்த அள விற்குத் தாங்கள் அளித்திருக்கிற வாக்குறுதிகளை, மிக்க அழகாகத் தீட்டி யிருக்கிற ஓவியத்தை நிறைவேற்றப் போகிறார்கள் என்ற சந்தேகத்தை யல்ல, இவர்களாலே நிறைவேற்ற முடியாத நிலையிலே இருக்கிறார்கள் என் பதை நான் அவர்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 1980-81 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை அளித்தபோது நிதிநிலை அறிக்கையின் விளைவாக ஏற்பட்ட பற்றாக்குறை என்று சுட்டிக்காட்டியது 9.57 கோடி ரூபாய். கடைசிவரையிலே அந்த நிதிநிலை அறிக்கையிலே விழுந்து துண்டு ஈடுகட்டப்படவில்லை. அந்த நிதிநிலை அறிக்கையிலே எந்த அளவிற்கு பற்றாக்குறை என்று சொன்னார்களோ அது நிறைவுபடுத்தப்படவில்லை. அந்த நிலையிலேதான் 1981-82 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையிலே 122.96 கோடி ரூபாய் துண்டு விழுந்திருக்கிறது. 9 கோடி ரூபாயை ஓராண்டு காலத்திற்குள்ளே ஈடுகட்டி, தங்களுடைய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத ஒரு அரசு இந்த ஆண்டிலே மீண்டும் ஒரு நிதிநிலை அறிக்கை தருகிறது. அந்த நிதிநிலை அறிக்கையிலே 122.96 கோடி ரூபாய் துண்டு விழுகிறது. இந்த நிலைமையிலே 'நாங்கள் பல்வேறு புதிய திட்டங்களை நிறைவேற்ற இருக்கிறோம்' என்று விவாமாக அறிக்கை வேறு கொடுத் திருக்கிறார்கள். அவற்றை எப்படி நிறைவேற்றப் போகிறார்கள்? எங்கே நிதி இருக்கிறது? இந்த அரசு முன்னேற்றத்திற்குத் தேவைப்படும் வளர்ச்சித் திட்டங்களுக்குச் செலவிடாமல் விநோதமாக விளம்பரங்களுக்குச் செலவிடுகிறது. நாட்டினுடைய வருவாயை, இந்த நாட்டினுடைய ஒவ்வொரு மனிதனும் அனுபவிக்கின்ற வளர்ச்சித் திட்டங்களிலே அதிக அக்கறை கொண்டு இன்றும், எதிர்காலத்திலும் மக்களை வாழ வைக்க வேண்டிய

நிதிநிலை அறிக்கையைத் தரவேண்டிய அரசினர், இன்றைக்குத் துண்டு விழுகிற நிதிநிலை அறிக்கை தந்திருப்பதோடு மட்டுமல்லாமல், நாட்டிற்கான வளர்ச்சித் திட்டங்களை தங்களாலே நிறைவேற்ற முடியாது என்ற நிலைமையையும் காட்டிக்கொண்டிருக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்கிறேன், 100 கோடி ரூபாய் செலவில் காகித ஆலை தொடங்கப் போகிறோம் என்று சொன்னார்கள். ஆட்சிக்கு வந்த நாளிலேயிருந்து "காகித ஆலையை இந்த அரசு துவங்க இருக்கிறது, காகித ஆலையை இந்த அரசு துவங்க இருக்கிறது", என்ற தகவல் வந்துகொண்டிருக்கிறதே தவிர, அந்தக் காகித ஆலை துவங்கப்படவில்லை. அதற்கான நிதியொதுக்கீடு இந்த ஆண்டு 27 கோடி ரூபாய். இந்த ஆட்சி செய்கின்ற உறுதியான திட்டங்கள் ஏதாவது இருக்கிறதா என்று பார்த்தால், அப்படி எதுவும் இல்லை. அதோடு மட்டுமல்ல (expected revenue) என்ற அளவிலே புதிய வரி விதிப்புகள் மூலமாக இந்த அரசு எதிர்பார்க்கும் வருவாய் ரூபாய் 20 கோடி. 122 கோடி ரூபாய் துண்டு விழுகின்ற ஒரு நிதிநிலை அறிக்கையிலே இந்த ஆட்சி புதிய வரி விதிப்புகள் மூலமாக எதிர்பார்க்கும் வருவாய் 20 கோடி ரூபாய் தான் என்ற நிலை ஏற்படும்போது, மீதியிருக்கும் பற்றாக் குறையை எப்படி ஈடு கட்டப் போகிறார்கள்? ஈடு கட்டவில்லை என்று சொன்னால், சரிப்படுத்தவில்லை என்று சொன்னால், எப்படி அரசினுடைய புதிய திட்டங்களை செயல்படுத்தப் போகிறார்கள்? அதற்கான விளக்கங்கள் தர வேண்டாமா? பக்கங்கள் இருக்கின்றன, காகிதங்கள் இருக்கின்றன என்று வெறும் திட்டங்களை மட்டும் எழுதி வைத்தால், அவற்றை எப்படி, எப்போது நிறைவேற்றப்போகிறார்கள் என்று அரசு எங்களுக்கு பதில் சொல்ல வேண்டாமா என்று கேட்க நான் கடமைப் பட்டிருக்கிறேன். இந்த ஆட்சியைப் பொறுத்தவரையில், இங்கு பேசுகின்றவர்கள் பல பேர் மத்திய ஆட்சி ஏதோ கையிலே பணத்தை இறுக்கி மூடி வைத்துக்கொண்டு இவர்களுக்குக் கொடுக்காததைப்போலவும் ஏதோ அங்கே ஒரு எதிரிகள் ஆட்சி இருப்பதைப் போலவும், இங்குள்ள எல்லா நிலைமைகளையும் மாநில அரசே சமாளித்துக்கொண்டிருப்பதைப் போலவும் ஒரு வர்ணத்தைத் தீட்டிக்கொண்டிருக்கிறார்கள். 7-வது (Finance Commission) சிபார்சு அடிப்படையிலே, ஏற்கெனவே எக்சைஸ் வரிவிதிப்பு மூலமாக மத்திய அரசு 20 சதவீதம் தான மாநிலங்களுக்கு முன்பு கொடுத்தது. 1979-80-லே மத்திய அரசு 20 சதவீதம் என்று இருந்ததை 40 சதவீதம் என்று ஆக்கி ஏற்கெனவே 91 கோடி ரூபாய் பெற்ற இந்த மாநிலத் திற்கு 192 கோடி ரூபாய் என்று அதிக நிதியுதவியை ஒதுக்கித் தந்திருக்கி றார்கள். இன்னும் சொல்லப்போனால் இந்தியா முழுவதும் இருக்கிற பல்வேறு

மாநிலங்களுக்கு சுமார் 1,000 கோடி ரூபாய் மத்திய அரசு மொத்தமாக விநியோகம் செய்கிறது. அதிலே தமிழகம் பெற்றிருக்கிற பங்கு 192 கோடி ரூபாய் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. நாம் எவ்வளவு அதிகமாகப் பணம் பெற்றிருக்கிறோம் என்பதைப் பார்க்க வேண்டும். மத்திய அரசு இந்த அரசுக்கு எந்த அளவுக்கு—இவர்கள் என்ன பேசினாலும், எப்படி நடந்து கொண்டாலும்—உதவி செய்து தங்களுடைய கடமையை ஆற்றியிருக்கிறது என்று பார்க்க வேண்டும். அதேநேரத்தில் அத்தனை கோடி ரூபாயையும் கொண்டு வந்து இங்கே செயல்படுத்தியிருக்கிற வளர்ச்சித் திட்டங்கள் என்னென்ன என்று பார்க்கிறபோது, நான் வேதனையோடு சொல்கிறேன் வளர்ச்சித் திட்டங்கள் இந்த அரசு வந்த பிறகு வளரவில்லை. வளர்ச்சித் திட்டங்கள் எல்லாம் காகிதங்களிலே தான் இருக்கின்றன. எந்தச் சூழ்நிலையிலே மத்திய அரசு நமக்கு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த ஆண்டு மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையில் விழுந்திருக்கிற துண்டு 1,800 கோடி ரூபாய். 1,800 கோடி ரூபாய் துண்டு விழுகிற பட்ஜெட்டை வைத்துக் கொண்டிருக்கிற மத்திய அரசு, இந்த அரசுக்கு எக்சைஸ் வரி மூலமாக ஏற்கெனவே கொடுத்ததை இரண்டு மடங்காக ஆக்கியதன் காரணமாக 100 கோடி ரூபாய் என்று இருந்ததை 200 கோடி ரூபாய் என்று உயர்த்தி மனமுவந்து தந்திருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். இவ்வளவுக்குப் பிறகும் இந்த அரசு வளர்ச்சித் திட்டங்களுக்காக

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

(முற்பகல் 10-30)

என்ன செலவழித்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டாமா? இந்த அரசு மத்திய அரசிடமிருந்து பெற்ற பணத்தையெல்லாம் (Non-Development Scheme) என்று சொல்லப்படும் வளர்ச்சித் திட்டங்கள் அல்லாத இனங்களுக்காகச் செலவழித்துக் கொண்டிருக்கிறது. தமிழ் வளர்ச்சி என்றும், தமிழ் விழா என்றும் இதுபோன்ற பணிகளுக்குத்தான் செலவழித்துக் கொண்டிருக்கிறார்களே தவிர தமிழ் நாட்டின் வளர்ச்சிக்காக என்ன செலவிடப் பட்டிருக்கிறது என்பதைக் கேட்பது என்னுடைய கடமை என்று நான் நினைக்கிறேன்.

அடுத்து, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும், மாண்புமிகு அமைச்சர்களும் தமிழ் நாட்டு மக்களிடையே ஒரு மிகப் பெரிய பிரமையை உண்டாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அதாவது, இவர்களுக்கெல்லாம் வாய்ப்பு

இல்லாத காரணத்தால்தான், தற்போது உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர் தல்களை நடத்த முடியாமல் காலம் கடத்திக் கொண்டு வருவதைப்போன்ற பிரமையை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஆட்சியாளர்களைப் பொறுத்தவரையில், உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை எப்போது வேண்டுமானாலும் நடத்துவதற்குக் காத்துக் கொண்டிருப்பது போலவும், அதற்கான அனுமதி கிடைத்தவுடனே நடத்த இருப்பதைப்போலவும் ஒரு பிரமையை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரை யில், நான் ஒன்றை நிச்சயமாகச் சொல்ல விரும்புகிறேன். இந்த ஆட்சி உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல்களையே நடத்தாது என்பது மட்டுமல்ல, நடத்தப் போவதில்லை என்பதற்கு ஒரு முழுமையான ஒப்புதல் வாக்கு மூலத்தையே தற்போது கொடுத்திருக்கிறது. இந்த ஆண்டு உள்ளாட்சி மன் றங்களின் தேர்தல்களுக்காகச் செய்யப்பட்டிருக்கும் நிதி ஒதுக்கீடு எவ்வளவு தெரியுமா ? ரூபாய் 24,000 அந்தத் தலைப்பில் தமிழக அரசு தன் நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கியிருக்கும் தொகை சாதாரண 24,000 ரூபாய்தான். இந்த அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்துவிட்ட பிறகு இந்த ஆட்சியால் இந்த ஆண்டு உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை நடத்த முடியுமா என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன். இந்த ஆட்சியாளர்களின் உணர்வுகள் எங்கே சென்று கொண்டிருக்கின்றன என்பதைத்தான் இந்த ஒதுக்கீடு காட்டிக் கொண் டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போலவே, இந்த ஆட்சியாளர்கள் செயல்படுத்துவதாகச் சொல்லும் திட்டங்களெல்லாம் வெறும் விளம்பரத்தைத் தேடிக் கொடுப்பதற்காக உள்ள திட்டங்களே தவிர, நாட்டுக்கு நன்மை தேடித் தரும் திட்டங்களாக இல்லை என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். உதாரணத்திற்கு ஒன்றைக் குறிப் பிட விரும்புகிறேன். தமிழ் நாட்டில் காடு வளர்ச்சிக்காக, மத்திய அரசின் ஒப்புதலோடு சுவிட்சர்லாந்து நாட்டுத் துணையோடு 45 கோடி ரூபாய் அள வுக்கு ஒரு திட்டத்தைத் தீட்டி செலவிட இருக்கிறார்கள். தமிழ் நாட்டில் எத்தனை சதவீத நிலப்பரப்பில் அரசாங்கத் துறைக் காடுகள் இருக்கின்றன, அதைப் போலவே எத்தனை சதவீத நிலப்பரப்பில் தனியார் துறைக் காடுகள் இருக்கின்றன என்பதுபற்றிய விவரம் ஏதேனும் இருக்கிறதா, மதிப்பீடு ஏதேனும் இருக்கிறதா என்றால் இல்லை. மாண்புமிகு தொழிலமைச்சர் அவர்கள் ஒரு வினாவிற்கு விடையளிக்கும்போது, சூரிய காந்தி எண்ணெயை உற்பத்தி செய்யும் ஆலை மூடிக்கிடப்பதாகவும் அல்லது அது வேறு எண்ணெ யைத் தயாரித்துக் கொண்டிருப்பதாகவும், சூரியகாந்தி விளைவிப்பதற்காக என்று நில ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை என்றும், எங்காவது அது

விளைந்தால் இந்த ஆலையில் உபயோகப்படுத்திக் கொள்ளப்படும் என்றும் குறிப்பிட்டார். இவ்வாறுதான் இந்த 45 கோடி ரூபாயைக்கூட சரியான முறையில் திட்டமிடாமலேயே செலவழிக்கப் போகிறார்கள் என்றுதான் எண்ண வேண்டியிருக்கிறது. இதற்காகச் செலவழிக்கப்பட இருக்கும் பணம் ஒரு ரூபாய் இரண்டு ரூபாயல்ல, 45 கோடி ரூபாய் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இந்தச் சமுதாயத்தில் உழைத்துப் பிழைக்கும் ஒரு தனி மனிதன் அல்லது கூலி வேலை செய்யும் ஒருவன் தன்னுடைய வருவாயில் விறகுக்காக மட்டும் 1½ ரூபாய் செலவிட வேண்டியிருக்கிறது. அந்த அளவிற்கு விறகின் விலை உயர்ந்திருக்கிறது. விறகின் விலை உயர்ந்திருக்கிறது என்பதை இந்த அரசு உணர்ந்துதான் இத்தகைய காடு வளர்ப்புத் திட்டத்தைக் கொண்டு வந்து செயல்படுத்த இருக்கிறது என்பதால், அதைப் பாராட்டுகிறேன். ஆனால் நான் கேட்பதெல்லாம் இப்படிப்பட்ட திட்டங்களை அமுல்படுத்தும்போது, தனியார் துறையிலுள்ள காடுகளில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? இதிலெல்லாம் இந்த அரசுக்கு ஒரு தெளிவு வேண்டாமா? ஏதோ கிடைக்கிற பணத்திற்குக் கணக்குக் காட்டுவது என்ற அடிப்படையில் இந்தப் பணத்தைச் செலவழிக்கிறார்களே தவிர, இந்தத் திட்டத்தை எப்படிச் செயல்படுத்தினால் முழுமையான பலன் மக்களுக்குக் கிடைக்கும் என்பதைப்பற்றி இந்த அரசு சிந்திப்பதாகக்கூடத் தெரியவில்லை.

திரு. ஆ. நல்லசிவன்: தனியார் துறையிலுள்ள காடுகளை எடுப்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். ஆனால் தனியாரிடமிருக்கும் பினாமி நிலங்களை எடுப்பதற்காக அரசு ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டு வந்து நிறைவேற்றியது. அதைச் சட்டமாக்குவதற்கு தேவையான அனுமதியை இன்னும் மத்திய அரசு வழங்குவதற்கு முன்வராமல் இருக்கிறது. அதுகுறித்து மாண்புமிகு உறுப்பினர் என்ன கருத்தைத் தெரிவிக்கிறார் என்று அறிய விரும்புகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: அதைப்பற்றி நான் பலமுறை பேசியிருக்கிறேன். இப்போதுகூட நேரமிருந்தால் அதைப்பற்றிப் பேச இருக்கிறேன். பினாமி நிலங்களைப் பொறுத்தவரையில்; யாரும் கொள்ளை அடித்துக் கொண்டு போகவில்லை. நாம் இயற்றுகிற சட்டங்கள் அரசியல் சட்டத்திற்கு உட்பட்டவையாக இருக்க வேண்டும். அது எந்த அவையாக இருந்தாலும், எதை வேண்டுமானாலும் சட்டமாக நிறைவேற்றுவது என்பதை மத்திய அரசு அனுமதிக்க முடியாது. பினாமி சட்டத்தை இங்கே நிறைவேற்றும்போதே, நான் அதிலிருக்கும் சங்கடங்களைக் குறித்தும், சிக்கல்களைக் குறித்தும்

இந்த அவையிலேயே எடுத்து வைத்தேன். நீங்கள் எதைச் சொன்னாலும் நாங்கள் அந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றியே தீருவோம் என்று விளம்பரத்திற்காக அன்றைக்கு அந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றினார்கள். விளம்பரத்திற்காக அதை நிறைவேற்றிவிட்டு, இப்போது அதைப்பற்றி அவதிப்பட்டு பேசிக் கொண்டிருப்பதில் பயனில்லை.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்த வரையில், இதைத் தயாரித்தவர்கள் இங்கேயுள்ள பிரத்தியட்ச நிலையைக்கூட உணர்ந்திருப்பதாகத் தெரியவில்லை. உதாரணத்திற்கு ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். நிலவரி வசூல் சம்பந்தமாக இங்கே ஒரு கணக்குத் தரப்பட்டிருக்கிறது. 1979—80 ஆம் ஆண்டில் தமிழகத்தில் வசூலிக்கப்பட்ட நிலவரி சுமார் 6,29,32,000 ரூபாய். 1980-81 ஆம் ஆண்டில் மட்டும் தமிழகத்தில் வசூலிக்கப்பட்ட நிலவரி ரூ. 2,79,18,000. ஆனால் 1981-82 ஆம் ஆண்டில் இந்த அரசு வசூலிப்பதாக எதிர்பார்க்கும் நில வரியின் அளவு ரூ. 2,92,18,000. 1980-81 ஆம் ஆண்டில் தமிழகத்தில் வறட்சியே கிடையாது. அப்போது வசூலிக்கப்பட்ட மொத்த நிலவரி ரூ. 2,79,18,000. ஆனால் இந்த ஆண்டு தமிழகத்தின் பெரும்பகுதி வறட்சியால் தவித்துக் கொண்டிருக்கிறது. பல இடங்களில் நில வரி வஜா செய்யப்பட்டிருக்கிறது. அல்லது வஜா செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு தாம் ஆளாகிக் கொண்டிருக்கிறோம். ஆனால் இப்படிப்பட்ட நிலைமையில் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தமிழகத்தில் வசூலிக்கப்பட இருக்கும் நிலவரி ரூ. 2.92 கோடி என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது வறட்சியே இல்லாத சென்ற ஆண்டில் வசூலிக்கப்பட்டதைவிட வறட்சிமிக்க இந்த ஆண்டில் அதிகமான நிலவரி வசூலிக்கப்பட இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அடிப்படையில்தான் கணக்கிடப்பட்டிருக்கிறது. இது என்ன கணக்கு என்று எனக்குப் புரியவில்லை. இது என்ன கணக்கா என்று மட்டுமல்ல, இது என்ன நிதிநிலை அறிக்கையா என்றே கேட்க வேண்டிய கட்டாயத்திற்கு நான் ஆளாக்கப்பட்டிருக்கிறேன். இப்படி தெளிவில்லாத நிலை காரணமாக இந்த அரசின் செயல்களை, விளைவினை இன்றையதினம் தமிழகம் அனுபவித்துக் கொண்டிருக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது.

அடுத்து, மதுவிலக்குக் கொள்கையைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். நான் மதுவிலக்குப் பிரச்சினையைப்பற்றிப் பேசினால் உடனே என்னைப் பார்த்து ஆளும் கட்சியினர் கேட்கிறார்கள். மது ஆந்திரத்தில் இல்லையா, மராட்டியத்தில் இல்லையா, கருநாடகத்தில் இல்லையா, அங்கெல்லாம் மதுவிலக்கு கொண்டு வர முடியாமல் இருக்கும்போது, இங்கே எங்களைப் பார்த்து

மட்டும் குறை சொல்கிறீர்களே என்று கேட்கிறார்கள். அங்கே மது விலக்கும் கொண்டுவர முடிகிறதா இல்லையா என்பது வேறு பிரச்சினை. ஆனால் இந்த அரசைப் பொறுத்தவரையில் மிகத் தீவிரமாக ஒரு கருத்தைச் சொல்லி வந்தார்கள். மதுவிலக்கைச் செயல்படுத்துவதற்கே உயிரை வைத்துக் கொண்டிருப்பதுபோலவும் மதுவிலக்குப் பிரச்சினைக்காக உயிரையேகூட விடுவதற்குத் தயாராக இருப்பதைப்போலவும் பேசினார்கள். மற்றவர்களையெல்லாம் மிஞ்சி மதுவிலக்கைக் கொண்டு வந்து அமுல்படுத்துவதற்காகவே பிறந்தவர்களைப் போல பேசினார்கள். தமிழகத்தில் இதைத் தீவிரமாக அமுல்படுத்தியே காட்டுவோம் என்று பேசினார்கள். அப்போதே ஆந்திரத்தில் மது இருக்கத்தான் செய்தது. கருநாடகத்திலும் மராட்டியத்திலும் இந்த நிலைதான் அப்போதும் இருந்தது. அங்கெல்லாம் மது இருக்கும்போதுதான் இவர்கள் இங்கே அப்படிப் பேசினார்கள். அப்போதெல்லாம் சொல்லாத வாதத்தை இப்போது எழுப்புவது சரியல்ல. இப்போது இவர்கள் குழப்பத்திற்கு ஆளானபோது எது கிடைத்தாலும் அதைச் சாதகமான வாதமாக எடுத்து வைக்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கும்போது இவர்களைப் பார்த்துப் பரிதாபப் படுவதைத் தவிர வேறு வழியில்லை.

அது மட்டுமல்ல, இந்தியாவிலேயே நிதிநிலை அறிக்கையை அளிப்பதில் தமிழகம்தான் கடைசியாக இருக்கிறது. தமிழகத்தில்தான் கடைசியாக நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட பெருமை நமது தமிழகத்திற்குத் தான் கிடைத்திருக்கிறது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பக்கத்து மாநிலமான பாண்டிச்சேரியில் இன்னும் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படவில்லை என்று சொல்கிறார்கள். புதுவை மாநிலம் என்பது யூனியன் டெரிடரி. அரசியல் சட்டத்தில் உள்ள ஏ. பி. சி. என்ற வரிசையில் அதற்கு எந்த அந்தஸ்து இருக்கிறது என்பது அனைவருக்கும் தெரியும். அப்படிப்பட்ட நிலையில் நமது தமிழகத்தைப் புதுவை மாநிலத்தோடு இணைத்துப் பார்ப்பது எந்த வகையிலும் சரியல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அவ்வளவு சிறிய மாநிலத்திலேயே இவ்வளவு காலதாமதப்படுத்துகிறார்கள் என்றால்; இவ்வளவு பெரிய மாநிலத்தில் காலதாமதம் ஏற்படுவது என்பது அவ்வளவு பெரிய விஷயமல்ல என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : ஒரு சிறிய மாநிலத்தை உதாரணம் காட்டிச் செயல்படுகிற பெரிய மாநிலம் இந்தியாவிலேயே தமிழகம் மட்டும்தான் இருக்கிறது என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.